**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : S.T.C. 549/2022**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 11.02.2026.**

| | |
|---|---|
| **Name : முனிராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் ஆத்தூர் மளிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 25.02.2020ம் தேதி நானும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் என்பவரும், உதவி ஆய்வாளர் பழனிசாமி ஆகியோருடன் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் ஜலகண்டாபுரம் பஸ் நிலையம் அருகில் அலுவல் குறித்து நின்றிருந்த போது பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த நபர் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறு ஏற்படும் வகையிலும், ஆபாசமான வார்த்தைகளால் தெவிடியாபையா என்று பேசிக் கொண்டிருந்தனர். பொது இடத்தில் வைத்து பொது மக்கள் பார்வையில் பேசினார்.

2) போலீசார் ஆகிய நாங்கள் எச்சரித்தும் கேட்காமல் விட்டு சென்றால் ஏதாவது பிடிக்கக்கூடிய குற்றம் செய்யக்கூடும் என்பதால் காவல் ஆய்வாளர் அவர்கள் காவல் படுத்தி நிலையம் அழைத்து சென்று வழக்கு பதிவு செய்தார். என்னுடன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் என்பவர் பணியிலிருந்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3) ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் எந்த ஆண்டு பணியில் சேர்ந்தேன் என்றால் சம்பவத்திற்கு ஒரு வருத்திற்கு முன்பு ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன். ராஜிக்கும், சின்னபையனுக்கும் நிலம் சம்மந்தமான பிரச்சனை இருந்து 18.12.2019 ம் தேதி குற்ற எண்.256/2019 ல் இரு தரப்பிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.சின்னபையன் என்பவர் மீது CC No.275/2020 வழக்கு பதிவு செய்யப்பட்டு இரு வழக்கிலும் ஆஜராகி வரும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4) பொது மக்களுக்கு இடைஞ்சல் செய்த போது நான், கோவிந்தராஜ், பழனிசாமி ஆகிய மூவரும் பேருந்து நிறுத்தத்தில் ரோந்து பணிக்காக வந்திருந்தோம். பேருந்து நிறுத்தம் வரும் போது பகல் 2 மணியிருக்கும். Movement பதிவேட்டில் கையொப்பம் செய்து விட்டு தான் ரோந்து சென்றோமா என்றால் ஆமாம். நாங்கள் தனிதனியாக சென்றோம். காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 2 மணிக்கு கிளம்பினோம். பேருந்து நிறுத்தத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 1 கிலோமீட்டருக்குள் தான் இருக்கும்.

5) எந்தெந்த பகுதிகளுக்கு ரோந்து சென்றோம் என்றால் அரசமர பிள்ளையார் கோவில், சந்தைப்பேட்டை, சின்னப்பம்பட்டி ரோடு அதற்கு பிறகு பேருந்து நிலையம் வந்தோம். எந்த ஒரு பிரச்சனையும் மற்ற இடங்களில் இல்லை என்றால் சரிதான். குறிப்பாக எந்த இடத்தில் பேருந்து நிலையத்தில் நின்றோம் என்றால் சேலம் செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்திற்கு சென்றோம். குறிப்பாக தாரமங்கலம் வழியாக செல்லும் பேருந்து நிறுத்தத்தில் நின்றோம்.

6) சிசிடிவி பொருத்தப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அருகில் உள்ள கடைகளில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் தெரியாது. என்னென்ன கடைகள் இருந்தது என்றால் பழக்கடை, டீ கடை, மேட்டூரான் ஓட்டல் ஆகியவை இருந்தது. சுமார் நான்கு பக்கங்களும் 20 வணிக கடை இருந்தது என்றால் ஆமாம். செல்போன் கடை, பூ கடை, பழக்கடை ஆகியவை இருந்தது. சுமார் 50 க்கும் மேற்பட்டோர் பேருந்து நிலையத்தில் இருந்தனர்.

7) எதிரி சேலம் பஸ் நிற்கும் இடத்தில் முன்பாக நின்றிருந்தார். தனியார் பேருந்தா அரசு பேருந்தா என்று நினைவில்லை. அந்த இடத்தில் யூனிபார்ம் போட்ட டிரைவர், கன்டெக்டர் நின்றிருந்தார்கள். யாரையாவது குறிப்பிட்டு திட்டினாரா என்றால் இல்லை. கெட்ட வார்த்தையால் பேசிக் கொண்டிருந்தார். மக்கள் யாராவது கெட்ட வார்த்தையால் திட்டியது குறித்து புகார் கொடுத்தார்களா என்றால் உதவி ஆய்வாளரிடம் கொடுத்திருக்கலாம். உதவி ஆய்வாளர் தான் புகார் தாரர் என்றால் சரிதான். பொதுமக்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

8) காவல் உதவி ஆய்வாளர் காவல் நிலையம் எதிரியை அழைத்து சென்றார். நானும் காவல் நிலையம் சென்றேன். மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்களா என்றால் தெரியாது. பொது மக்களிடம் வாக்குமூலம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. எதிரி மீது ஏற்கனவே வழக்கு உள்ள நிலையில் அவர் காவல் நிலைய விசாரணக்கு அழைத்த போது அவர் மீது இருந்து விரோதம் காரணமாக உதவி ஆய்வாளர் பொய் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.